[1973 மார்ச் 30

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) : தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கு விரிவுபடுத்தலாமென்னும் மத்திய அரசின் செயற் குறிப்பிற்குத் தமிழ் நாடு அரசு தன் இசைவைத் தந்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கும் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

Water supply for Avinashi and adjoining taluks

* 577 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal at present to let Kundah tail-end to feed the tanks and ponds in Avinashi and nearby taluks; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, 60 வருடத்திற்கு முன்பாக, குந்தா கடைமடைப் பகுதி நீரை உபயோகப்படுத்தி, வறட்சியான பகுதியாகிய பல்லடம், அவினாசி, ஈரோடு தாலுகாக்களிலுள்ள குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எஸ்டிமேட்ஸ்கூட ரூ. 8 கோடிக்குப் போடப்பட்டதே, அதுபற்றி மறுபரிசிலனை செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குந்தா கடைமடைப் பகுதியிலிருந்த தண்ணீரைக்கொண்டு பாசன வசதித் திட்டம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குந்தா நீர் மின்சக்தித் திட்டம், பவானி ஏற்பாட்டால் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள், கோயம்புத்தூர் குடிநீர் வழங்கு திட்டத் தேவைகள், கேரள மாநிலம் அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாசன வசதி ஆகிய கூடுதல் பொறுப்புகளைக் கருத்திலேகொண்டு, தலைமைப் பொறியாளர் இந்தத் திட்டத்தை எச்சரிக்கையுடன் செயல்படுத்த வேண்டுமென்ற குறிப்பின்பேரில் தற்பொழுது இந்தக் கருத்து

[1973 மார்ச் 30]

சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவினாசி வட்டத்திலிருக்கிற வறட்சியான பகுதிகளுக்கு மாற்றுத் திட்டத்தைப் பரிசீலிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

Nagapattinam–Nagore Road

*578 Q.—THIRU A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the cement concreting work of the road from Nagapattinam to Nagore?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

வீடு கட்டும் திட்டங்களுக்கான உதவி

*579 வினா.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து 1972—73-ஆம் ஆண்டுக்குக் கடன் ஏதேனும் பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து தமிழ்நாடு அரசு 1972-73-ஆம் ஆண்டுக்கு ரூ. 150 லட்சம் கடனைப் பெற்றிருக்கிறது. இதுதவிர, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வீட்டு வசதி வாரியத்திற்கு நேர்முகமாக ரூபாய் ஒரு கோடியை பிப்ரவரி 1973-ல் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகக் கடனைக் கொடுத்துள்ளது.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு எதும் உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு நேரிடையாக உதவிகள் செய்வதில்லை. ஆனால், எல்.ஐ.சி. மூலமாகவும், 'ஹட்கோ' என்ற நிறுவனத்தின்